1979 ஏப்ரல் 9]

ஏழ்மைக் குடும்பங்களை சேர்ந்தவர்களுமான மாணவ மாணவியருக்கு என்றே தனிக் கவனம் செலுத்தி உருவாக்கியதும், கைத்தொழில் பயிற்சிக்கு முதன்மை அளப்பதுமான சிறப்புப்பாட முறைப்படி கற்பித்து வருகின்றன. இந்த 30 பள்ளிகளில் பயன்படுத்துவதற்கான பாடநூல்களை அச்சிடுவதற்கான செலவிற்காக யூனிசெப் நிறுவனம் ரூ.2,06,000 தர இசைந்துள்ளது.

## இணைப்பு II

[393-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 678-கான விடையைக் காண்க.

விடை

(அ) ஆம்

(ஆ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நோய்த்தடுப்பியல் துறையால் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் கீழ்வருமாறு :—

(1) ப்ரூஸெல்லோசிஸ் .— கால்நடைகளைத்தாக்கி கருச்சிதைவு உண்டாக்கும் இந்நோய் மனிதனையும் தாக்கி குளிர், காய்ச்சல், மூட்டுவலி போன்றவற்றை திரும்பத்திரும்ப உண்டாக்குகிறது. சென்னை மாநகரில், கால்நடைகள், மற்றும் மனிதரிடையே இந்நோய் கணிசமான அளவுக்கு பரவியுள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது.

(2) காசநோய் .— இது மனிதர்களையும், கால்நடைகளையும் பெருமளவில் பாதிக்கும் நோயாகும். காச நோயாய் இறக்கும் மாடுகள் பெரும்பாலும் மனிதவகை காச நோயால் தாக்கப்பட்டிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது.

மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே முதல்முறையாக காசநோய் மற்றும் கருச்சிதைவு நோய்களற்ற மாட்டுப்பண்ணை திட்டம் 1975 ஆம் ஆண்டிலிருந்து சிறிய அளவில் செயல்படத் தொடங்கி மாடுகள் பரிசோதிக்கப்படுகின்றன.

(3) லெப்டோஸ்பைரோசிஸ் .— கால்நடைகளையும் மனிதர்களையும் தாக்கும் இந்நோய், மஞ்சள் காமாலை, சிறுநீர்ப்பிருத்தி ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. சென்னை மாநகரில் இந்நோய் பரவுவதற்கு எலிகளும் பெருச்சாளிகளும் முக்கிய பங்கு வகிக்கிறது என அறியப்பட்டது.

[1979 ஏப்ரல் 9

(4) விஷ உணவு நோய் (அல்லது) சால்மொனல்லோசிஸ் .— இந்நோய்க் கிருமிகள். இறைச்சி, உணவு, தண்ணிர் மூலம் பரவி, மனிதர்களையும், கால்நடைகளையும் பெருமளவு பாதிக்கிறது. பதினைந்து வகையான சால்மொனல்லா கிருமிகள கண்டுபிடிக்கப்பட்டது.

(5) வெறிநோய் .— இந்தியாவில் மிகவும் பரவியுள்ள இந்நோய் எல்லா கால்நடைகளையும், மனிதர்களையும் தாக்குகிறது. நோயுற்ற நாய்கள் கடிப்பதால் இந்நோய் வெகுவாக பரவுகிறது. பெருச்சாளிகளும் இவ்வெறி நோய் பரப்புவதில் கணிசமான பங்கு வகிக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. மனிதர்களிலும், கால்நடைகளிலும், வெறிநோய் உள்ளதா என கண்டு அறிய ''கார்னியா டெஸ்ட்'' என்னும் முறை இந்தியாவிலேயே முதன் முறையாக உபயோகிக்கப்பட்டது. இம்முறையினால், மனித மருத்துவ மனைகளுக்கும் இந்நோயை கண்டறிய உதவி செய்யப்படுகிறது.

(6) தொற்றும் தோல் சீழ் நோய் :— இந்நோய் வெள்ளாடுகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவுகிறது, இதற்குக் காரணமான நச்சுயிரிகள் பிரிக்கப்பட்டு, மின்னணு உருப்பெருக்கி கருவியின் மூலம் அதன் தன்மைகள் அறியப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS